WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம்



ஆசிரியர்
சகோ. அர்ச்சுனன் M.A., A.Bs.,

கிறிஸ்துவின் வசனம்
WORD OF CHRIST

மாசம் 3 ஏப்ரல் 1995 கனி 9

கன்மலையின் மேல் அஸ்திபாரம்
The foundation on a rock

இப்பூமியில் அழிந்து போகிற ஒரு வீட்டைக்கட்டுவதற்கு முன் ஆழமாகத் தோண்டி கற்களால் அஸ்திபாரம் போட்டு அதின்மீது வீட்டைக் கட்டுகிறோம். அதைப்போல கன்மலையாகிய கிறிஸ்து மீது நமது ஆவிக்குரிய ஜீவியம் கட்டப்பட வேண்டும். ஒருவேளை அவர் மீது நீங்கள் கட்டப்படாமல் ஒரு தனிநபர் மீதோ அல்லது ஒரு ஸ்தாபனத்தின் மீதோ கட்டப்பட்டால் வாழ்க்கையில் பரீட்சை வரும்போது மணல்மீது கட்டப்பட்ட வீட்டைப்போல் அழிந்து போவீர்கள்.

ஆண்டவராகிய இயேசு சொல்லுகிறார், என்னிடத்தில் வந்து என் வார்த்தைகளை கேட்டு அவைகளின் படி செய்கிறவன் யாருக்கு ஒப்பாயிருக்கிறான் என்று உங்களுக்குக் காண்பிப்பேன். ஆழமாய் தோண்டி, கற்பாறையின் மேல் அஸ்திபாரம் போட்டு, வீடு கட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான். பெருவெள்ளம் வந்து நீரோட்டம் அந்த வீட்டின் மேல் மோதியும், அதை அசைக்க கூடாமற்போயிற்று. ஏனென்றால், அது கன்மலை மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது லூக் 6:47-48. இவ்வசனங்களில் மூன்று காரியங்களை ஆண்டவர் உணர்த்துவதைப் பார்க்கிறோம். ஒன்று, அவரிடம் வரச்சொல்லுகிறார். இரண்டு, என் வார்த்தைகளைக் கேட்க வேண்டும். மூன்று, கேட்டவைகளின்படி செயல்பட வேண்டுமென்கிறார். நீங்கள் உங்கள் வாழ்க்கையில் இந்த மூன்று காரியங்களை செய்கின்றீர்களா? வெறுமனே கிறிஸ்தவர்களாக மட்டும் இருந்தால் போதாது அனைத்து காரியங்களிலும் அவர் சொல்கிறபடி செயல்படும் போது நாமும் கன்மலையில் அஸ்திபாரம் போடப்பட்ட மனுஷனுக்கு ஒப்பாயிருப்போம்.

கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: இதோ அஸ்திபாரமாகிய ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப் பெற்றதும், திட அஸ்திபாரமுளளதுமான மூலைக்கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான் என்று ஏசாயா 28:16ல் வாசிக்கின்றோம். ஆம் பிரியமானவர்களே! இந்த தன்மையாகிய கிறிஸ்துவில் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்பட்டுப் போவதில்லை. இந்தக் கல்லின் மேல் விழுகிறவன் நொறுங்கிப் போவான். இது எவன் மேல் விழுமோ அவனை நசுக்கிப் போடும் மத் 21:44ல் ஆண்டவர் சொல்வதை வாசிக்கின்றோம்.

நாம் காண்கின்ற இந்த உலகத்தில் எத்தனையோ இராஜ்யங்கள் இருந்தன, அத்தனையும் அழிந்து போயின, கன்மலையாகிய கிறிஸ்துவின் இராஜ்யம் இப்பொழுது உலகெங்கிலும் இருக்கிறது. இதுவே அவருடைய சபை. நேபுகாத்நேச்சார் காலத்தில் அவன் ஒரு சொப்பனம் கண்டான் கையால் பெயர்க்கப்படாத ஒரு கல்பெயர்ந்து உருண்டு வந்து அவன் பார்த்த பசும்பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு, களிமண்ணுமான சிலையின் பாதங்களில் மோதி, அவைகளை நொறுக்கி களத்திலிருந்து பறந்து போகிற பதரைப் போல் அடித்துக் கொண்டு போயிற்று. சிலையை மோதின கல்லோ வென்றால் ஒரு பெரிய பர்வதமாகி பூமியெல்லாம் நிரப்பிற்று என்று தானியேல் 2ம் அதிகாரத்தில் பார்க்கிறோம். இன்று உலக இரட்சகராகவும் சபையின் தலைவராகவும், நம்மை ஆளுகிற ஆண்டவராகவும் இருக்கிறார் இவரே கன்மலையாகிய கிறிஸ்து இவரில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் வெட்கப்பட்டுப் போவதில்லை. தானி 2:44ல் சொல்லப்பட்டது போல அந்த இராஜாக்களின் நாட்களில் பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு இராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார். அதுவே கிறிஸ்து ஏற்படுத்தின சபை மத் 16:18ல், மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய் இந்தக் கல்லின் மீது என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை என்று வாசிக்கிறோம். இச்சபைக்கு கிறிஸ்து மூலைக் கல்லாயிருக்கிறார் எபே 2 20. இக் கல்லின் மீது ஆவிக்குரிய மாளிகையாகக் கட்டப்படுங்கள் கர்த்தர் தாமே அவர் மீது நீங்கள் கட்டப்பட உதவி செய்வாராக!

★ சபைச் செய்திகள்

1. மார்ச் 18ம் தேதி தாடிக்கொம்பு பகுதியில் மூன்று ஆத்துமாக்கள் கிறிஸ்துவின் சுவிஷேசத்திற்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்று கொண்டனர். இவர்களுக்கு தாடிகொம்பு ஊழியர் சகோ. மைக்கேல் செல்லத்துரை அவர்கள் ஞானஸ்நானம் கொடுத்தார்.

2. மார்ச் முதல் வாரத்தில் வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் கூடுமிடத்தில் விசுவாசிகள் வளர்ச்சிக்கான ஆவிக்குரிய கூட்டம் இனிதே நடைபெற்றது.

3. மார்ச் 12ம் தேதி M. வாடிப்பட்டியைச் சேர்ந்த சகோ. ரஞ்சித் கிறிஸ்துவின் சுவிஷேசத்திற்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம்பெற்றுக் கொண்டார். வத்தலக்குண்டு சபை ஊழியர் ஞானஸ்நானம் கொடுத்தார்.

★ மார்ச் மாத வேத அறிவுப் போட்டியில் வெற்றிபெற்றவர்.

சகோதரிமேரி எலிசபெத் கலைவாணி வத்தலகுண்டு

★ சிறுவர் வேத அறிவுப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள்.

1 S. ஜான்வெஸ்லி காஞ்சியார்குறிச்சி
2. P. பாலசுப்பிரமணி நெல்மடையூர்
3. G. குணவதி G தும்மலப்பட்டி
4. A. ஆனந்தி சின்னுபட்டி
5. P. சசிகலா சின்னுபட்டி
6. P. அசோக்குமார் வதிலை
7. K. பாப்பு ...
8. A. ஜெகதீசன் ...
9. S. கார்த்திக்கேயன் ...
10. M. திருக்குமரன் ...
11. வேல்மணி K. பட்டி
12. செல்லமணி ...
13. S. அருண்குமார் கீ.கோ.பட்டி
14: P. எழில்ராஜா ...
15. N. வேல்பாண்டி ...
16. S. ஆண்ட்ரூஸ் கொன்னம்பட்டி
17. அசோக்குமார் வதிலை
18. S. கிருஷ்ணமூர்த்தி ...
19. முனியம்மாள் ...
20. P. ஜாஸ்மின் வதிலை

★ மார்ச் மாத இதழின் விடைகள்

1. தேவனுக்கு யாக் 4:4
2. ஜீவன் 1 யோ 5:12
3. நொறுங்குண்ட ஆவிதான் சங்51:17
4. பெலிஸ்தியர்கள் 1 நாளா 14:11
5. இனிய சொற்கள் நீதி 16:24
6. மாம்ச இச்சைகள்
7. அவசியம்
8. கோள் சொல்லுகிறவன்
9. புழுதியில்
10. ஆரோன்

★ சிறுவர் வேத அறிவுப் போட்டி விடைகள்

1. பெருமையானவைகளை யாக் 3:5
2. பிணியாளியை ,, 5:15
3. அவர் ,, 1:13
4. விசுவாசமும் ,, 2:26
5. நடப்பது யாக் 4:14

★ இம்மாத வேத அறிவுப் போட்டி

1. சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட கற்பலகைகளை எதினால் எழுதிக் கொடுத்தார்?
2. எந்தெந்த வம்சத்தார் அக்கினியும், அக்கினி ஜ்வாலையுமாயிருப்பார்கள்?
3. யார் என்றென்றைக்கும் மன்னிப்படையாமல் நித்திய ஆக்கினைக்குள்ளாயிருப்பான்?
4. துர் இச்சைகளுக்கு உடலைப் பேணாமலிருந்து யாரை தரித்துக் கொள்ள வேண்டும்?
5. ஞானக்கண் கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள் அந்த கன்மலை யார்?
6. இரவும் பகலும் நாங்கள் வேலை செய்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களிடத்தில் பிரசங்கித்தோம் என்று யார் சொல்வது?
7. இயேசு என்று பெயர் உள்ள நபர் யார்?
8. தெமேத்திரியு என்பன் யார்?
9. இயேசு எந்த மரத்தைக் கண்டு, இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்ககடவது என்றார்?
10. நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக இருப்பவர் யார்?

★ சிறுவர் வேத அறிவுப் போட்டி

(பேதுரு எழுதின பொதுவான முதலாம் நிருபத்திலிருந்து)

1. உங்கள் கவலைகளையெல்லாம்.....வைத்து விடுங்கள்
2. ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால்———வெட்கப்படாமலிருந்து
3. அவர் பரலோகத்திற்கு போய்—— வலது பாரிசத்தில் இருக்கிறார்
4. சகோதரரிடத்தில் அன்பு கூருங்கள்.....பயந்திருங்கள்
5. நான் பரிசுத்தர் ஆகையால்———பரிசுத்தராயிருங்கள்.

இடமாற்றம்

பழைய முகவரி	புதிய முகவரி
கிறிஸ்துவின் சபையார்கள்	கிறிஸ்துவின் சபையார்கள்
கூடுமிடம்	கூடுமிடம்
2.2.63A/22	ராஜன் நகர்
கணவாய்பட்டிரோடு	கணவாய்பட்டிரோடு
வத்தலக்குண்டு	வத்தலக்குண்டு

FORM IV

1. Place of Publication	— Batlagundu
2. Periodicity of its Publication	— Monthly
3. Printer's Name	— C. Pandiya rajan
4. Address	— Santhi Printers, Main road Batlagundu-624202.
5. Whether Citizen of India	— Indian
6. Publisher's Name	— B. ARJUNAN
7. Address	— 2-2-63 A/22 Kanavaipatti road Batlagundu-624202
8. Editor's Name	— B. ARJUNAN
9. Address	— as above

I B. ARJUNAN hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated 31—3—95

B. ARJUNAN Publisher

எங்களோடு சேர்ந்து தேவனை
ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்

ஞாயிறு காலை 9-00
புதன் மாலை 6-30

கிறிஸ்துவின் சபை
கணவாய்பட்டி ரோடு
வத்தலகுண்டு-624202

இவ்விதழ் இலவசமாக
அனுப்பப்படுகிறது.



MONTHLY MAGAZINE News Paper
WORD OF CHRIST: Regd. No. 84661-92.
Registerd No TN/DDL/19

PRINTED MATTER

To.

If undel ered please return to:

THE EDITOR
WORD OF CHRIST
Post Office Box No. 5.
Batlagundu-624202.
S. India

Edited and puplised by B. Arjunan M.A.A.Bs. on behalf of church of Christ 2.2.63A/22 Kanavaipatti Road BTL
Printed by C. Pandiyarajan B.Sc. SHANTHI PRINTING PRESS Main Road Batlagundu-624202.